கிராக்கி இருப்பதால் அண்மையில் 400 சிலைகளை அனுப்பவேண்டு மென்று ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சிலைகளைப் பொறுத்தவரையில் வெளிநாடுகளில் அதிகம் கிராக்கி இருப்பது போல் தோன்றுகிறது.

தமிழ்நாட்டு அரசுத் திட்டங்களுக்கு இங்கிலாந்து உதவி.

* 199 வினா—திரு. டி. மார்டின் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1970 ஜனவரித் திங்கள், தமிழ்நாட்டுக்கு வந்துள்ள இங்கிலாந்து வெளிநாட்டு அபிவிருத்தி இலாகா பெண் மந்திரி திருமதி ஜூடித் ஹார்ட் அவர்களிடம் தமிழ்நாட்டு தொழில் அமைச்சர் பேச்சு வார்த்தை நடத்தினாரா ?

(இ) ஆம் எனில், அப்போது தமிழக அரசின் ஒன்றிரண்டு திட்டங்களுக்கு இங்கிலாந்தின் உதவி வேண்டும் என்று கேட்கப் பட்டதா ?

(உ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) &(உ) இல்லை.

THIRU T. MARTIN : Sometime back it was published in newspapers that the Hon. Minister for Industries had discussed with the Hon. Minister from England regarding some schemes for Tamil Nadu. May I know from the Hon. Minister whether it was true?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி அந்த அமைச்சரி டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவி கேட்கப்பட்டதா என்ப தாகும். அப்படி மாநில அரசு நேரடியாகக் கேட்கக் கூடாது என்பது மரபு. ஆகவே "இல்லை" என்று சொன்னேன். இப்படி அமைச்சர்கள் வரும்போது அவரவர்கள் நாட்டில் உள்ளவர்கள் இந்த நாட்டில் நடத்துகிற தொழில்களுக்கு, அவர்கள் அரசாங்கம் நம் அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு நடத்துகிற தொழில்கள் பற்றி நம்மோடு விவாதிக்கிறார்கள். அதிலுள்ள சிக்கல்கள் பற்றிச் சொல்கிறார்கள். புதிய தொழில்கள் வளரவேண்டுமென்றால் அதற்கு என்னென்ன உதவிகளை நம் அரசாங்கத்திலிருந்து எதிர்பார்க்க முடியும் என்ற விவரங்களை எல்லாம் சேகரிக்கிறார்கள். சட்டபூர்வ மாக நாம் நெகோஷியேஷன்ஸ் என்ற முறையில் பேசுவதில்லை. விவரங்களைச் சொல்கிறோம்.

உதாரணமாக அவர்கள் வந்தபோது தூத்துக்குடி உரத் தொழிற் சாலைக்கு என்னென்ன நமக்குத் தேவைப்படுகின்றன, என்னென்ன கிரேட் பிரிட்டனிலிருந்து கிடைக்கவேண்டும் என்பதைப் பற்றி யெல்லாம் எடுத்துக் கூறினோம். அதேபோல் ஐ.ஸி. என்ற பிரிட்டிஷ் கம்பெனி இருக்கிறது. நாம் பெட்ரோல் கெமிக்கல் காம்ப்ளக்ஸ் ஒன்று மணலியில் ஏற்படுத்தலாம் என்ற ஒரு செயற்குறிப்பு

இருக்கிறது. அதுபற்றி அவர்கள் மத்திய அரசோடு என்னென்ன தொடர்பு கொள்ளவேண்டும், என்னென்ன தேவைகள் என்று நம்மிடம் தெரிந்து கொள்கிறுர்கள். ஆக, விவரங்கள் பரிமாறப்படுகின்றன. வேறு சட்டபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதில்லே.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : வினு எண் 200.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir, I want the House to get into the question again. The question is whether the Hon. Minister had held discussion. Mr. Martin never asked whether the Hon. Minister had conducted any negotiation or transacted any other thing. But the Hon. Minister was giving an answer in the 'negative' for the first question. That means the Hon. Minister had not held any discussion.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : ....தமிழக அரசின் ஒன்றிரண்டு திட்டங்களுக்கு இங்கிலாந்தின் உதவி வேண்டும் என்று கேட்கப்பட்டதா ?..............என்பதுதான் வினு.

THIRU K. VINAYAKAM : I am having the English version of the question. The question was whether he had held any discussion. No question of negotiation or anything arises. So, what was the discrepancy in the question? Why should the Hon Minister give an answer in the 'negative'?

MR. SPEAKER : Please see clause (*b*). The hon. Member Thiru Martin has asked whether aid for a few schemes of Government of Tamil Nadu was sought for from England.

THIRU K. VINAYAKAM : He has answered in the negative and that means he had not held discussion. But I saw his photo with the Lady Minister in the '*Hindu*'.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வியின் முதல் பகுதிக்கு "ஆம்" என்று சொல்லியிருக்கிறேன். விளக்கமும் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : துணேக் கேள்வி கேட்கும்போது "நாம் உதவி கேட்கவில்லே, அவரோடு பேசினேம்" என்றுதான் சொல்லியிருக்கிறுர்கள். இதில் என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது ?

தடப்பள்ளி இராச வாய்க்கால்

* 200 வினு—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் உள்ள தடப்பள்ளி இராச வாய்க்காலேப் புதுப்பிக்கும் (re-modelling) செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.